Mallar Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 8 முஹர 19 இதழ் 226

யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-9-1986

## இனப்பிரச்சனை தீர்வுக்கான ஏனைய வழிகளை இலங்கை இந்தியாவுக்கு இன்று அனுப்பும்

—லலித்

கொழும்பு, புதன்

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் முகமாக இலங்கை அரசு அண்மையில் தெரிவித்திருந்த யோசனைகளில் கூறப்பட்டிருந்த தீர்வுக்கான ஏனைய வழிமுறைகளை இலங்கை அரசு இன்று இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

இதேவேளை இனப்பிரச்னைத் தீர்வுக்கான மூன்றும் சுற்று விவாதத்திற்கு ஆயத்தம் செய்யும் முயற்சிகளில் இலங்கையின் பங்கு இத்துடன் முடிவடைகிறது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

மாகாணசபை யோசனைக்கு எதிரான சில பிரசாரங்கள் பற்றி அத்துலத்முதலி கருத்துத் தெரிவிக்கையில் ஜனநாயக ரீதியிலான நேரடி நடவடிக்கை அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது தாபனங்களோ நேரடியற்ற விதத்தில் நடவடிக்கை ஆரம்பித்திருப்பது குறித்து

(8ம் பக்கம் பார்க்க)

## சிறையிலுள்ள உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக

# யாழ். குடாநாடு பூராவும் நீதிமன்றங்கள் முன் மறியல்

[அலுவலக நிருபர்]

**வெலிக்கடைச் சிறையிலும், பூஸா முகாமிலும் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவிக்கும் முகமாக இணைப்புக்குழு எடுத்துள்ள தீர்மானத்துக்கிணங்க யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் வெகுஜன அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து நீதிமன்றங்களின் முன்னர் நேற்று மறியல் போராட்டம் நடத்தினர்.**

யாழ். குடாநாட்டிலுள்ள சகல நீதிமன்றங்களின் முன் இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது.

இம்மறியல் போராட்டத்தினால் நீதிமன்றங்கள் முற்றுமுழுதாக இயங்கவில்லை.

நீதிமன்றங்களின் முன் வாசல் கதவுகளில் 'நீதிமன்றம் மூடப்பட்டுள்ளது' என்று எழுதப் பட்ட 'போர்ட்'டுகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை ஆரம்பமான நீதிமன்றமறியல் போராட்டம் இம்மாதம் 29-ம் திகதி வரை நடைபெறவுள்ளது தெரிந்ததே.

நீதிமன்றங்களின் முன் நடைபெற்ற மறியல் போராட்டத்தினால் எவரும் நீதிமன்றங்களுக்குள் செல்ல முடியவில்லை. (மா)

## இன்று ஈழவர் முன்னணியின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், புதன்

ஈழவர் முன்னணியினரால் யாழ்.நகரில் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இன்று நடாத்தப்படவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு நாச்சிமார்கோவிலடியில் இருந்து ஆரம்பமாகவிருக்கும் இந்த ஊர்வலம் யாழ்.செயல

(8.ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், புதன்.

வடக்கு - கிழக்கு - மலையகம் ஆகியபகுதிகளில் ஆயுதப்படையினரின் அடாவாடித்தனங்களை ஆட்சேபித்து ஈழவர் முன்னணி இன்று நடத்தும் மாபெரும் ஊர்வலத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொள்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

இந்த ஊர்வலத்தில் சகல பொதுஜன அமைப்புகளையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## "மாகாணசபை என்ற மாயையைவிட்டு வெற்றிவரை போராடுவோம்"

### -ஈழவர் முன்னணி

யாழ்ப்பாணம், புதன்.

"மாகாண சபை என்ற மாயைக்குள் முடங்கிவிடாமல் எமது பிரதேச, சமூக, மத எல்லைகளைக் கடந்து ஈழவர் என்ற அடிப்படையில் கரம் கோர்த்து ஈழப் போராட்டத்தை வெற்றிவரை இட்டுச் செல்லவேண்டியது இன்றைய ஈழப் போராட்டத்தின் தேவையாகும்."

இன்று யாழ். நகரில் நடைபெறும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யொட்டி ஈழவர் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

"ஈழப் போராட்டம் மலையகம் நோக்கி விரிவடைவதையும் அம்மக்கள் உணர்வுபூர்வமாக இதில் கலந்துகொள்வதையும் ஜீரணிக்க முடியாத இந்த அரசு மலையக மக்களின் குடியுரிமையை வழங்கி ஈழப் போராட்டத்திலிருந்து திசை திருப்ப முயற்சித்தபோது தோல்விகண்டது. குடியேற்றங்களைப் புதிய பாணியில் கையாண்டுவருகின்றது. அவ்வகையில் அம்மக்கள் வதியும் இடங்களைச்சுற்றிக் குண்டர்களைக் குடியமர்த்துவதன்மூலம் அம்மக்களிடையே ஏற்படும் தொடர்பையும் துண்டிப்பதற்கான சதிமுயற்சியில் இறங்கியுள்ளது. அத்துடன் அக்குண்டர்கள் ஆயுதபாணிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்.

"மக்களை அழிக்கும் இத்தகைய இராணுவ சட்டதிட்டங்களினூடே தன்னை ஒரு சமாதானப் பிரியராகக் காட்டிக்கொள்கிறார் ஜே. ஆர். பேச்சுவார்த்தைக்குச் சமரசதிட்டம்வழங்கியுள்ளேன் எனக் கூக்குரல் இடுவதன்மூலம் உலக அரங்கில் தன்னை நியாயப் படுத்த முனைகின்றார். இச்சமரசத் திட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் எந்தவகையான அடிப்படைப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கூறாமல் அதற்கு மாறாகத் தமிழ் மக்களின் பிரச்னைகளை வெறும் பதவிப் பிரச்னையாகக் கொச்சைப்படுத்தியுள்ளார்."

[7ம் பக்கமும் பார்க்க]

## "இன்றைய ஊர்வலத்தில் மாணவர்களும் பங்குபற்றி எதிர்ப்பை காட்டுவோம்"

யாழ்ப்பாணம், புதன்

"அரசின் அடக்குமுறைகள் உச்சக்கட்டத்தை அடைந்த நிலையில் வீடுகளிலிருந்து குமுறிக் கொண்டிருப்பதால் மட்டும் நமது எதிர்ப்பினை வெளிக்கொணர்ந்து விடமுடியாது. அரசுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் எமது எதிர்பினை வெளிக்காட்டுவோம்' சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கைகள் அரசின்கொடுமைகளை பறைசாற்றும் இந்நேரத்தில் அவற்றிற்கு வலுவூட்டும் முகமாக இன்று நடைபெறும் எதிர்ப்பு ஊர்வலத்தில் மாணவர்களாகிய நாமும் கலந்துகொண்டு நமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவோம்" என்று மாணவர் இளைஞர் பொதுமன்றம் நேற்று வெளியிட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

[8-ம் பக்கம் பார்க்க]

## கன்னியாவில் படையினர்-விடுதலைப்புலிகள் கடும் சமர்:2 சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், புதன்

திருமலை மாவட்டத்திலுள்ள கன்னியா வீதியில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற திடீர் நேரடி மோதலில் இராணுவ தரப்பில் இருவர் பலியானார்கள்: பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி மோதல் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் திருமலை மாவட்டம் கன்னியா வீதியொன்றால் எமது வீரர்கள் சிலர் நடந்து சென்றுகொண்டிருந்த சமயம் எதிர்பாராத விதமாக ராணுவத்தினரை சந்திக்க நேர்ந்தது, அப்பொழுது எமது வீரர்கள் நேரடி மோதலில் இறங்கினர். எமது

(8ம் பக்கம் பார்க்க)

## லொறியில் பொருட்கள் கொள்ளையடிப்பதைக் கண்டித்து 29-ம் திகதி முதல் கடையடைப்பு; லொறி சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், புதன்.

யாழ்.வர்த்தக சங்கம், யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம், வடபிரதேச லொறி உரிமையாளர் சங்கம் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து லொறியில் பொருட்கள் எடுத்துவரும்போது கொள்ளையடிப்பதைக் கண்டித்து இம்மாதம் 29ம் முதல் காலவரையற்ற கடையடைப்புப் போரா

[8-ம் பக்கம் பார்க்க]

## வெலிக்கடை, பூஸா உண்ணாவிரதிகளுள் 10 பெண் 14 ஆண் ஆபத்தான நிலையில்

(நமது அலுவலக நிருபர்)

வெலிக்கடைச் சிறையிலும், 'பூஸா' முகாமிலும் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்போரில் 10 தமிழ் பெண்களும் 14 தமிழ் ஆண்களும் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த 12-ம் திகதி வெலிக்கடைச் சிறையிலும் 'பூஸா' முகாமிலும் 35 சிறைக்கைதிகள் தமது கோரிக்கை நிறைவேறும் வரை சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது தெரிந்ததே.

பூஸாமுகாமில் நேற்று 71 தமிழ்க் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தனர். இவர்களுள் 19 பேர் பெண்கள். அவர்களுள் 10 பேர் மயக்க நிலையடைந்தனர். இராணுவம் எச்சரிக்கைவிடுத்ததுடன் பயமுறுத்தியும்கூட இப்பெண்கள் தங்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லை.

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பவர்களுள் 14பேர்மயக்கமடைந்தனர். இவர்களுள் மோசமாகப் பாதிக்கப்பட்ட 6 பேர் பலாத்காரமாகத் தூக்கிச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. [மா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு முன்னால் உள்ள 2 பரப்பு காணியும் மூன்று அறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: K. கிருஷ்ணதாஸன், ''கிறீனர்'' பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு.
C 4799

நல்ல நிலையிலுள்ள நூறு முட்டைக்கு கிட்டப்பொரிக்கக்கூடிய மண்ணெண்ணெயில் இயங்கும் Incubator குஞ்சு பொரிக்கும் மெசின் விற்பனைக்கு சிக் அன்கைன்ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். C 4785

600X13 இம்போட் ரீபில் டயர் விற்பனைக்கு உண்டு அனஸ் அன் கோ புதிய நவீன சந்தை யாழ்ப்பாணம்.
C 4794

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கருகாமையில் பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்பாக 1½ பரப்புக்காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு; M. இராமச்சந்திரன், 4ம் கட்டை ஆனைக்கோட்டை.
C 4753

மீசாலை வடக்கு வேம்பிராய் வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் மின்சாரம், கிணறு வசதியுடன் ஐந்து (5) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ. செல்லையா மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. C 4797

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, உத்தமமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

பெரிய அளவிலான செப்பு, பித்தளை, அலுமினிய கிடாரம், டபாரா சட்டி, வெங்கல அசையா மணி, திருவாசி, குத்துவிளக்கு, மெழுகுவர்த்தி ஸ்டான்ட், ஸ்தூபி, வேல், சூலம், கும்பசெம்பு, மற்றும் எவர்சில்வர் அன்பளிப்புப் பாவனைப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ஸம்ஸ், 26/B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை: 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[C-4755]

## தவறிவிட்டது

ஞாயிற்றுக்கிழமை21-9-86ல் திருநெல்வேலி அம்மன் கோவில் வீதி, தலங்காவல் பிள்ளையார் கோவிலுக்கும் நல்லூர் கோவில் வீதி, சிவன் வீதி சந்திக்கும் இடையில் ஒரு மூக்குக்கண்ணாடி, பெட்டியுடன் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து அம்பிகைரூஜா அஹிம்சகிரி அம்மன் கோவில் வீதி, திருநெல்வேலி வடக்கு விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
C 4791

## தேவை

தையல் - சுற்றிங் வேலைகளில் நல்ல அனுபவமுள்ள பெண்கள் உடன் தேவை. நேரில் வரவும் சோதிறெக்ஸ்ரைல்ஸ், [Sothy Textiles] 14, நவீன சந்தை, யாழ்ப்பாணம். C 4801]

உத்தியோகம் பார்க்கும் இருவருக்கு சமயல் உட்பட வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. N. M. S, 2,நியூ மார்க்கட். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். அல்லது 443 மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, 23890.
[C-4781]

## வகுப்புகள்

க. பொ. த. (உயர்) 87 விஞ்ஞான/கணித வகுப்புக்கள் ஆரம்பம் 24-09-86 பி. ப. 3மணி. Science Centre, Karaveddy. C 4786

## கல்வி

A/L 87, 88 கலை வர்த்தக வினா விடை வகுப்புக்கள் தபால்மூலம் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 75 சத முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி. மொடேர்ன் எடியுகேசன் சென்றர், கரவெட்டி.
(C 4671)

## சேவை

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள், தமிழ்-ஆங்கில தட்டெழுத்து வேலைகள், தெளிவான ரோணியோ பிரதிகள் உயர்தர காகிதத்தில் குறித்த நேரத்தில் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள: கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 22823. C 1405

யாழ். சைனீஸ்றெஸ்ரூரன் முதலாம் குறுக்குத்தெரு, பலரின் வேண்டுகோளுக்கு இணங்க எங்களுடைய ஸ்தாபனம்தினசரி இரவு 8-30 மணி வரை திறந்திருக்கும். தொலைபேசி இல: 23160 (C 4790)

### மானிப்பாய் கோயில் பற்று ப. நோ. கூ. சங்கம்

### கேள்வி கோரல்

எமது சங்கத்திற்குத் தேவையான எரிபொருளை அநுராதபுரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பரல்களில் லொறி மூலம் ஏற்றித் தருவதற்கு ஒரு லீற்றருக்கு லொறிக் கூலிக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 27-09-86 நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.
(A 1404)

### மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச்சாக்கு விற்பனை

சங்கத்திலுள்ள 4500 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 26-09-86 பி. ப. 2-00 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்பத்திரங்களுக்கும் சங்க வேலைநேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
(A 1403)

பொ. காங்கேயன்,
சட்டத்தரணி,
திருநெல்வேலி.

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

வண்ணார்பண்ணை கிழக்கு சபாபதி வீதியைச்சேர்ந்த சின்னத்தம்பி நடராஜா பிள்ளை கைம்பெண் இரத்தினம்மாவின் மரணசாதனச்சொத்துக்கள் விடயத்தில்

-மரணமெய்தியவர்.

வழ. இ: தத்துவம் / 3992
வைத்திலிங்கம் துரைரட்ணம் பெண் இராஜேஸ்வரி, சபாபதி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்.

எதிராக

1. நடராஜாபிள்ளை செல்வராஜா
2. வைத்திலிங்கம் துரைரட்ணம், சபாபதி வீதி,வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள காலஞ்சென்ற சின்னத்தம்பி நடராஜபிள்ளை கைம்பெண் இரத்தினம்மாவினால் நொத்தாரிசு பொ. காங்கேயன் முகதாவில் 29-09-1985ல் 5361ம் இலக்கத்தில் முடிக்கப்பட்டுள்ள மரணசாதனத்தைஎண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம்திகதி முற்பகல்9.00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றூனதாக்கப்படலாகாது என்று காரணம்காட்டுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இந்த 1986ம் ஆண்டு புரட்டாசி மாதம் 16ந் திகதி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

என்னால் வரையப்பட்டது.
பொ. காங்கேயன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 4789)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### மழைப்பதிகம் பாராயணம்

யாழ்ப்பாணம், புதன் யாழ். நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றமும், யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகமும் இணைந்து நாட்டில் மழை பொழிய வேண்டி மழைப் பதிகம் பாராயணம் செய்யவுள்ளனர்.

இம் மாதம் 26ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை மழைப்பதிகப் பாராயணத்தை திருமுறைமன்றத்தலைவர் திரு.

[7-ம் பக்கம் பார்க்க]

### கண்ணீர் அஞ்சலி

**அமரர் மா. நடராசா**

நெஸ்லே நிறுவன வட பிராந்திய முகாமையாளர் அமரர் மா.நடராசா அவர்களின் மறைவு நம் போன்றவருக்குஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். திறமை, செல்வாக்கு, புகழ் என்பன பெற்ற நடராசாவின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும் அன்னாருக்கு எமது அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ். வி. முருகேசு
ஸ்தாபனத்தார்.
C 4798

### 31-ம் நாள் நினைவஞ்சலி



**ஜேக்கப் தத்துவசிங்கம் பீரிஸ்**

மறைவு:
25-08-1986

நெஞ்சினில் காயம் நிலைத்ததையோ நீசரின் பாதகச் செயல்களினால். சேவைகள் செய்த பெருமகனே சென்றாயோ நீயும் 'ஷெல்' பாய்ந்து, கார்மழை பொழியுது கண்களெல்லாம் கானலாகுது வாழ்க்கையிங்கு. கலங்குகின்றோம். அனைவரது கண்ணீர் அஞ்சலிகள்.

பத்திரிகை விற்பனையாளர்களும், சைக்கிள் விநியோகஸ்தர்களும்.
C 4795

பொ. காங்கேயன்,
சட்டத்தரணி,
திருநெல்வேலி.

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலைச் சேர்ந்த செல்லர் பொன்னையா பெண் நல்லம்மாவின் மரணசாதனச் சொத்துக்கள் விடயத்தில்.

-மரணமெய்தியவர்.

செல்லர் பொன்னையா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

மனுதார்.

வழ. இல; தத்துவம்/ 3987

எதிராக

1. சின்னத்தம்பி நாகலிங்கமும் பெண்
2. அன்னம்மாவும்
3. நடேசு சுப்பிரமணியமும் பெண்
4. யோகேஸ்வரியும்
5. தம்பு துரைசிங்கமும் பெண்
6. இந்திராணியும்
7. தம்பையாபரமலிங்கம்
8. தம்பையா யோகலிங்கம்
9. வீரேசு தம்பையா மகள் சுசீலா
10. வீரேசு தம்பையா மகள் சுகுணா
11. வீரேசு தம்பையா மகள் சித்திரா
12. வீரேசு தம்பையா மகள் சுலோஜனா
13. தம்பையா தியாகசீலன், எல்லோரும். No 12, Jin Bee Eng Dua, Taynten View, 6th mile cheras, Kuala-lampur.

-எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள காலஞ்சென்ற செல்லர் பொன்னையா பெண் நல்லம்மாவினால் நொத்தாரிஸ் பொ. காங்கேயன் முகதாவில் 26--09-1977ல் 1812ம் இலக்கத்தில் முடிக்கப்பட்டுள்ள மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாசி மாதம் 26ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றூனதாக்கப்படலாகாது என்று காரணம் காட்டுவதற்கு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இந்த 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 14ம் திகதி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

என்னால் வரையப்பட்டது:
பொ. காங்கேயன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 4788)

### சேவைக்காலப் பயிற்சி ஆங்கிலம் ஆண்டு 8

### இடமாற்றம்

28-09-86ல் யா/வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த மேற்படி பயிற்சி வகுப்பு யா/நாவலர் ம. வி. யில் நடைபெறுமென்பதை சம்பந்தப்பட்ட ஆசிரியர் கவனத்திற்கொள்ளவும்.

D. R. அருமைநாயகம்
ஆங்கில வட்டாரக் கல்வி அதிகாரிக்காக
[A-1406]

## மணிவாக்கு

சுயநிர்வாகம், சுய ஒழுக்கம், சுய பொறுப்பு ஆகிய மூன்றும் ஒரு மனிதனின் சுதந்திரத்திற்கானபாது காப்புக்கள்

— பேர்னிஸ் மூர்

# நமது நோக்கு

## கிழக்கிலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை

கிழக்கிலங்கையிலிருந்து சமீப காலமாக வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகள் பெரும் கவலையைத்தோற்றுவித்துள்ளன.

இலங்கை ராணுவத்தினருக்கும் தமிழ் போராளிகளுக்குமிடையில மிக உக்கிரமான போர் ஒன்று அங்கு நடந்துகொண்டிருப்பதாகக் கருதப்பட்டபோதிலும் அப்பாவி பொதுமக்களே பெரும்பாலும் கொலலப்பட்டுவருகிருர்கள் என்பது வெளிப்படை.

போராளிகளுடன் பொருதவேண்டிய ராணுவத்தினர் வீடுகளிலும் வேலைத்தலங்களிலும் உள்ள மக்களையே பழிவாங்கிவருகின்றுர்கள்.

படுவான்கரைப் பகுதியில் ஆயுதப்படையினர் அண்மையில் முற்றுகையிட்டதனால் சுமார் நாநூறு குடும்பங்கள் அண்மையில அகதிகளாக வெளியேறியுள்ளன. அங்குராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தி பொதுமக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திவிட்டதால் சுமார் பத்தாயிரம் மக்கள் பட்டினிக்குள்ளாக நேர்ந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இன்னும் தேடுதல் வேட்டைக்கென்று இளம்பும் இராணுவத்தினரும் அதிரடிப்படையினரும் மனம்போன போக்கில் பொதுமக்களைச்சுட்டுத்தள்ளுவதாகவும்தகவல்வருகின்றது. நேற்று கிடைத்த செய்தியொன்றின்படி வாகனேரிப் பகுதியில் மட்டும் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதல்வேட்டையின் போது பதினறு தமிழ்மக்கள் பலியாகியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

தமிழ்பிரதேசங்களில் அரசபடைகளுக்கும், தமிழ் போராளிகளுக்கு மிடையில் போர் ஒன்றுநடந்துகொண்டிருக்கின்றது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இப்போரில் தவறுதலாக, அல்லது தற்செயலாக பொதுமக்கள் இடையில் சிக்குண்டு பலியாவது இயற்கை. ஆனல் வேண்டுமென்றே பொதுமக்கள் கொல்லப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம்.

தொழிற்கூடத்தில் வேலை செய்துகொண்டிருப்பவர்களை, தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை, வயலில் விவசாயம் செய்துகொண்டிருப்பவர்களையெல்லாம் தமிழர் என்பதைத் தவிர வேறு காரணமின்றிச் சுட்டுத்தள்ளுவதும், சுடப்படுபவர்கள் எல்லாம் 'பயங்கரவாதிகள்' என்பதும் சிந்தனைத் தெளிவுள்ள மனிதர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியவையல்ல.

அண்மையில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்ததின் பின்னரே அங்கு நிலைமைகள் மோசமடைந்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டை திரு. அத்துலத்முதலி கடுமையாக ஆட்சேபித்திருக்கிருர்.

இதுபற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி சென்னையில் விடுத்த அறிக்கையில் உண்மையிருக்கிறதோ இல்லையோ அமைச்சர் அத்துலத் முதலி அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார் என்பதை எவரும் மறுக்கவியலாது.

இந்த விஜயத்தையடுத்து படையினர் மேற்கொண்டுள்ள அட்டூழியங்களுக்கு அமைச்சர் பொறுப்பில்லையெனில் குற்றச்சாட்டை மறுத்துக்கொண்டிருப்பதைவிடுத்து அத்துமீறி நடந்துகொள்ளும் படையினரை அவர் கட்டுப்படுத்தவேண்டும். அவர்கள்மீது மக்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை பகிரங்கமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த வகையில் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் களங்கத்தை அவர் போக்கிக் கொள்ள முன்வருவாரா?

## கண்காட்சி

இருப்பிட்டி, செவ்.

புங்குடுதீவு வட்டாரப்பாடசாலைகளின் பொதுக் கண்காட்சி ஒன்று அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. புங்குடுதீவு வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்திட்ட அடிப்படையில் நடையில் நடைபெற்ற கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையை உள்ளடக்கிய வகையில் இக்கண்காட்சி நடைபெறும். பாடசாலைகளின் தெரிவு சமூகவியல், விஞ்ஞானம் போன்ற ஒவ்வொரு துறையின் அடிப்படையில் இடம்பெறும். இதற்கான நடவடிக்கைகளை கொத்தணி அதிபர் ஆர். எஸ். செல்லத்துரை மேற்கொண்டு வருகிருர். (இ)

## தீவுப்பகுதி தபால் பொதிகள்

இருப்பிட்டி, செவ்

யாழ். தபாலகத்திலிருந்து தீவுப்பகுதிக்கான தபால் பொதிகளை வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் ஏற்றி வந்த போதிலும் தற்போது பிரயாணிகளின் இடவசதியினைக் கருதி இதனை மாற்றியமைத்துள்ளனர்.

தற்பொழுது வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் ஏற்றி வருவதற்கான நடவடிக்கைகளை புங்குடுதீவு தபாலக அதிபர் மேற்கொண்டுள்ளார்.

உலக அரசியல் அவதானி

## பாரிஸ் மாநகரைக் கலக்கிவரும் ஐந்து குண்டு வீச்சுக்கள்;

## பிரெஞ்சு ஆட்சி — நீரையும் நெருப்பையும் இணைக்கும் நிலை;

## பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் தீராத தேர்தல் பிரச்னை

## ஆசிய விவகாரங்களில் அதிக அக்கறை கொள்ளும் சோவியத் ரஷ்யாவும்,

## அகில உலகின் கவனத்தை ஈர்க்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளும்

### பாரிஸ்

உலகை நடுங்கவைத்த மாமன்னன் நெப்போலியன் காதலித்த பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் ஹிட்லரின் ஆக்கிரமிப்பையும் தப்பியிருந்தது; மண்ணுலகின் சுவர்க்கமெனப் புகழ்பெற்ற பாரிஸ் இம் மாதத்திலேயே ஐந்து முறை அடுத்தடுத்து குண்டு வீச்சுக்குப் பலியானது. பிரான்ஸ் இரண்டாவது உலக யுத்தத்தின் பின் புத்துயிர் பெற்று பிரகாசமடைந்தது ஜனதிபதி டிகாலின் தேசபக்தியாலும் அரசியல் ராணுவ ஞானத்தாலும்; இன்று அவர் உயிருடனிருந்தால், அதிர்ச்சியால் உயிரிழப்பார்.

சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாக பிரான்ஸில் சிறையிடப்பட்ட ஸ்பானிய கெரிலா ஜோர்ஜ் இப்ராஹிம் அப்தொலா எனபவரே இந்த சம்பவங்களுக்கு மூலகாரணமென்று கருதப்படுகிறது. அவர் யாராலுைம், காரணம் எதுவானுலும் கொலைகாரர் எவ்வகையிலும் தப்பமாட்டார்கள்; ஈவஇரக்கமின்றித் தண்டிக்கத் தாம் தயார் என்கிருர் பிரெஞ்சுப் பிரதமர் ஷிராக்.

இது வெளிப் பிரச்னையென்றல ஊருக்குண்டான அரசியல் நெருக்கடி பிரதமருக்கும் ஜனதிபதிக்குமுண்டான கொழுவல் போராட்டம். வலதுசாரிப்பிரதமரும், சோஷலிச ஜனதிபதி மித்தரான்டும இதுவரையும் மணமாகாத இல்லற ஆட்சியை நடத்தினர்கள். இன்று பிரதமர் ஷிராக் தம்முடைய 'பிறைவேற்றைசேஷன்' திட்டத்துக்கு பாராளுமன்றத்தில் அங்கிகாரம் பெற்றிருக்கிருர். சோஷலிச ஜனதிபதி இதனை எதிர்ப்பதால் அந்த மசோதா சட்டமாவதற்கு வேண்டிய கையொப்பத்தை மறுக்கிருர்.

நெருப்பும் நீரும் கல்யாணம் பண்ணுவதெப்படி? என்ற கேள்வியைப் பிரெஞ்சுப் பொதுமக்கள் எழுப்புகின்றனர்.

### இந்திய உபகண்டம்

இந்தியாவில் தினந்தோறும் நடைபெறும் பயங்கரவாதச் சம்பவங்களை பெரிதுபடுத்தி பத்திரிகையில் பிரபலப்படுத்துவதில் பாகிஸ்தானும் அதன் ஆருயிர் நண்பன் இலங்கையும் இன்பம் காண்கின்றன.

இந்தியாவிலிருந்து பிரிந்து போன பாகிஸ்தானும், அதிலிருந்து பிரிக்கப்பட்ட பங்களாதேஷும் அன்றுதொட்டு இன்றுவரைக்கும் இராணுவ ஆட்சியில் திளைக்கின்றன. மக்கள் இளைக்கின்றனர்.

பாகிஸ்தானில் செல்வி பூட்டோ தலைமைதாங்கும் பீ பீ பீ கிளர்ச்சிகளை அடக்குமுறைக்கஞ்சி கைவிடவில்லை. லாகூரில் நடந்த, நடைபெற்ற கொலைச்சம்பவங்கள் எதிர்ப்பியக்கத்தின் பிடிவாதமான கோரிக்கைகளுக்கு பொதுமக்கள் பெருமளவு உண்டென்பதை உணர்த்துகின்றன.

ராணுவத்தின் திறமையால் இவற்றை தற்காலிகமாக அடக்கமுடியுமானுலும் வருடமுடிவிற்கு முன் புதிய தேர்தல்கள் நடத்தவேண்டுமென்ற எதிர்க்கட்சிகள் இயக்கம் வலுப்பெறுகிறது. அடுத்த மாதம் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகுமென்கிருர் பெனுசிர் பூட்டோ. இன்று செல்வி பூட்டோவுக்கு பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திருமதி அக்குவினோவிற்கு அன்றிருந்த செல்வாக்கு இல்லையானுலும், பொதுமக்கள் நெருக்கடி இன்னும் சரியான முஸ்தீபு அடையாவிட்டாலும், ஜனதிபதி ஸியாவிற்கும் அவருடைய பிரதமருக்கும் நாட்டில் அதிக கௌரவம் கிடைப்பதில்லை. அதிருப்தியடைந்த நிலையில் மக்கள் புரட்சியில் ஈடுபடுமளவிற்கு நிலைமை மோசமடையவில்லை.

பஞ்சாப்பில் 100 பிணங்கள் விழுநதால்தான் புரட்சிக்கு அறிகுறி என்று சொல்லப்படுகிறது

அமெரிக்காவின் செல்லப்பிள்ளை பாகிஸ்தான். பூட்டோவை சிறையிலிட்டதை அமெரிக்கா கண்டித்தபோதும் அது ஸியாவை இலகுவில் கைவிடாது. பூட்டோ சோவியத் ஆட்சிக்கெதிராக ஆப்கான் பிரச்னையில் நிற்பாரா என்ற சந்தேகம் அமெரிக்காவிற்கு உண்டு.

33 வயதுடைய செல்வி பெனுசிர் பூட்டோவிற்கு எவ்வகையிலும் பாகிஸ்தான் வருங்காலத்தில் தலைமைத்துவம் வழங்குமென நம்ப இடமுண்டு.

### பங்களாதேஷ்

வங்க ஜனதிபதி தேர்தல் அடுத்த மாதம் 15ல் நடைபெறவிருக்கிறது. இதற்கும் பெரிய எதிர்ப்பு அதிகரித்திருக்கிறது. எர்ஷாட்டில் எவ்வித மனமாற்றம் ஏற்படவில்லையென்றும், நடக்கவிருக்கும் தேர்தல் தம்முடைய ராணுவ ஆட்சியைத் தொடர எடுக்கும் ஒரு தந்திரமென்றும் இரண்டு பிரதான எதிரணிகுழுக்கள் தீவிர பிரசாரம் செய்கின்றன.

மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டுமென்றும், தேர்தலில் மோசடிசெய்ய இராணுவம் பயன்படுத்தப்படுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஷேய்க் ஹசீனு வாஜெட்டும், பீகம்கலாடஸயா என்ற பெண்மணியும் மக்களைக் கேட்கின்றனர்.

1975ல் இடம்பெற்ற சதிப் புரட்சியில் தலைவர் முஜிபுர் ரஹ்மான் குடும்பத்தினர் அனைவரும் கொல்லப்பட்டதற்குக் காரணமாகவிருந்த லெப்டினன்ட் கேணல் சயீர் பாரூர், எர்ஷாட்டுக்கெதிரான பிரதான வேட்பாளர் என்பது வெறும் புருடா எனக் கருதப்படுகிறது.

### சிங்கப்பூர்

செல்வம் கொழிக்கும் மேற்கு நாடுகளுக்கு நிகராக மிகச் சிறிய சிங்கப்பூரை சொல்வது ஒரு வழக்கமாகவிருநதது. இலங்கையும் இன்னெரு சிங்கப்பூராக எழுச்சி பெற விருப்பம்கொண்டது. உலகமே 'ஒரு சந்தையிற் கூட்டமென்று' ஞானிகள் கொள்வதுபோல், சந்தைப் பொருளாதாரத்தில் மிதந்த சிங்கப்பூர் இன்று தளர்ச்சியடைநதுவிட்டது.

### மலேஷியா

ஐந்து வருடம் பிரதமராய் இருந்த மலேஷிய பிரதமர் மகாதீர் மகமட், தமது நாடு என்றும் செல்வத்திற் குன்றுதென்று நினைத்திருந்தார். இன்று அது அவர் கண் முன்னுல் குலறிப்போவதைக் காண்கின்ருர். தென்கிழக்காசியாவில் ஒரு நிதானமான ஜனநாயகம் என்று கருதப்படும் மலேஷியாவில் இஸ்லாமிய தீவிரவாத அரவம் தீண்டியிருக்கிறது. எண்பது லட்சம் மலேஷிய இனத்தவரைக்கொண்ட நாட்டில் அந்த அளவிற்கு சிறுபான்மை இனத்தவர்கள் — சீனர், இந்தியர், தமிழர் — நலம் பேணப்படவேண்டும். இன்னும் ஒரு வருடம் பிரதமராக இருக்கும வாய்ப்பை கைவிட்டு தேர்தல் நடத்தி அமோக வெற்றியடைந்திருக்கும் பிரதமர் மகமட் இனவாதத்துக்குஇடங்கொடுப்பவரல்ல; ஆனல் பொருளாதாரம் வளர்ச்சியடையாவிட்டால், இனக்குரோதத்தை ஒழிக்க, சமூக ஒற்றுமையை நிலைநாட்டமுடியாதநிலை ஏற்படும்.

### ஆசியாவும் ரஷ்யாவும்

இன்று சியோலில் (தென்கொரிய தலைநகர்) 10-வது ஆசிய விளையாட்டுப்போட்டிகள் நடைபெறுகின்றன. 1988ல் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டின் முன்னேடியென்பதால் அகில உலகமும் இதனை நன்கு அவதானிக்கிறது. ஆசியாவின் கம்யூனிஸ்ட் நாடுகள் இதில் பங்குபற்ருதபோதும் சீனு மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பெரும் சாதனைகளை ஏற்படுத்தி இருக்கிறது. அடுத்த போட்டி அங்கு நடைபெருதாம். அரசியல் வேறுபாடுகளும் பகைமையும் இருந்தபோதும் உலகின் மிகப்பெரிய கண்டம் நான்கு பெரும் சமயங்கள் உதயமான கண்டம், ஒரு பழைமையான நாகரிகத்துக்கு உரித்தானது.

சோவியத் ரஷ்யா புதிய தலைவர் கொர்பசேவ் தலைமையில் ஆசிய விவகாரங்களை ஒரு புதுநோக்குடன் பார்க்கிறது.

ஜப்பானுடனும் சீனவுடனும் இஸ்ரேலுடனும் முண்டிக்கொள்வதால் மேற்கத்திய வல்லரசுகள் இதனைப் பயன்படுத்தி பல ராஜதந்திர ராணுவ அமைப்புக்களில் பலன கண்டன.

பழைய பிரச்னைகளை மறந்து புதிய அணுகுமுறைக்கு ஒத்துழைக்க முன்வாருங்கள் என்கிருர் கொர்பசேவ்,

[8ம் பக்கம் பார்க்க]

## பயிற்சிவகுப்பு

மன்னர் செவ்

மன்னர் மாவட்டத்திலுள்ள மத்திய மகாவித்தியாலயங்கள் மகாவித்தியாலங்கள் சிரேஷ்ட பாடசாலைகள் ஆகியவற்றில் சிரேஷ்ட ஆசிரியர்களாகக் கடமைபுரியும் ஆசிரியர்களை தத்தம் பாடசாலைகளின் அதிபர் இல்லாதவேளைகளில் அதிபரின் கடமைகளை கவனிப்பதற்காக அவர்களை பிரதி அதிபர்களாக நியமனம் செய்து அவர்களுக்கு பாடசாலை நிர்வாகம் ஒழுங்கு, சட்டம் போன்ற தலைப்பில் தற்சமயம் மாவட்டகல்விப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பயிற்சிவகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி வகுப்பில் ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொள்கின்ருர்கள். மாவட்ட பணிப்பாளர் செல்வி எம். ஆறுமுகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (இ)

# மக்களின் அன்பன்



அவர் நடந்துகொண்டே நித்திரை செய்வார். இது அவரைப்பற்றி பொதுவாக நிலவிய கூற்று இது சர்ச்சைக்குரிய விஷயம் எனினும் இது உண்மை. நித்திரைகொள்வதற்கு போதிய நேரத்தை அவரின் சேவை இடம் கொடுப்பதில்லை, அவர் கால்நடையாகவே சென்று பொதுநலப் பணியை ஆற்றிவருவார். வீதியில் ஓரமாக நடந்துசெல்கையில் அந்த நேரத்தை நித்திரைக்குப் பயன்படுத்துவார். அவருடைய வாழ்க்கை ஒரு புதிர், அவர் வேறொருவருமல்லர். மக்களால் அன்பாக இராசர் உபாத்தியாயர் என அழைக்கப்படுபவரே. உத்தியோக-சேவைவழி சேமன் கந்தசுவாமி என அழைக்கப்படுவார்.

"திரைகடலோடியும் திரவியந் தேடு" என்ற எம்கிழவி பொன்மொழிக்கிணங்க மலேசிய நாடு சென்றனர். அங்கு நிலவும் அரசசேவை அடிமைத்தனையும் அந்நிய நாட்டு அநாசார ஊடுருவலும் அரசசேவையைத் துறந்து பிறந்தபொன்னாட்டை நாடச் செய்தன திரு. கந்தசுவாமி அவர்களை.

எல்லாப்பணிகளிலும் ஆசிரியப்பணியே மேலானதெனக் கண்ட திரு கந்தசுவாமி அவர்கள் ஆசிரியராகத் தன்னாட்டில் சேவைபுரிய முன்வந்தார். உளத்தத்துவ அறிவும் கல்வியூட்டும் முறையும் ஆசிரிய சமுதாயத்தில் நல்லிடத்தைத் தேடிக்கொடுத்தன ஆகவேதான் இவர் ஆசிரியர்களில் "இராசா உபாத்தியாயர்" ஆனார்.

தனமும் சேவை முடித்து மக்கள்சேவை மகேஸ்வரன் சேவை என வழக்கப்படுத்திக் கொண்டார் அவர். அவருக்கு துவிச்சக்கரவண்டிஓடும்பயிற்சி இல்லைப் போலும். நோயாளியை நாடிச்செல்லும் வைத்தியர் போன்றவர் அவர். எளிதில் காட்சிக்கொடுப்பவர். சேவை அருள்பரிபாலிப்பவர். மோட்டார் அனுப்பத்தேவையில்லை. நடையில் களையாது சலியாது செல்லும் வழக்கம்; காத்திரமான, மழை, வெயில், பனி தாக்கமுடியாத வலுவுடைய தேகம் எதையும் எந்த நேரத்திலும், செய்துகொடுக்கும் உள உறுதி பாரதப்பெருமகன் காமராஜரின் உள அமைப்போ.

எவ்விஷயத்தையும் இலகுவாகவும் இணக்கமாகவும்தீர்த்துவைப்பதில் தனக்கென்ற ஒரு தனி இடத்தை தேடிக்கொண்டவர். இனியவார்த்தைகள். இடையில் ஒரு புன்முறுவல், பக்கம்சேராநேர்மைநெறி, பொறுமை இவரின் பிணக்குத்தீர்க்கும் பணியின் வெற்றிக்குக் காரணம், அவர் தீர்க்காத பிணக்குகள் இல்லை. குடும்பப்பிரிவு, எல்லைத்தகராறு, அடிபிடி சண்டை இன்னும் எத்தனையோ.

கிராமச்சங்கத் தேர்வுக்கு திரு கந்தசுவாமி அவர்களையும் அபேட்சகராக நிறுத்தினர் வழமையான போட்டிக் கலகலப்பு, காசெறிதல், கார் ஓடல், கள்ளூற்றுப்பெருகல் இவை இராசா உபாத்தியாயர் பக்கம் காணக்கிடையா, அவரைப்போல் நடந்தனர் வாக்குச்சாவடி. அவருக்கு வாக்களித்தனர். இது வழமை. இராசா உபாத்தியாயருக்கே வெற்றி. கிராமச்சங்கத்தில் அவர் தெரிவு. இதேகெடுபிடி இருபத்தைந்து வருடகாலம் என்றே எண்ணுகிறேன். சிறந்த சாதனை.

எல்லைக் கூட்டல் வேலி போட்டுஆட்கிபண்ணல் இவை அக்காலத்தில் சர்வசாதாரணம். திரு கந்தசுவாமி அவர்கள் அழைக்கப்படுவார்கள் பருவெட்டுக் கண்மதிப்பு வந்ததும் செய்துகொள்ளும் மட்டில், வளவு அளவிடப்படும் அவர் உத்தரவு பெருத தராதர பத்திரம் பெருத, நில அளவையாளர்தான், ஆனால் அளவில் இம்மியளவும் பிழை கிடையாத சேவையரே. ஒரே ஒரு வித்தியாசம் மற்றவர்கள் பணம் பெறுவார்கள் இவர் எதுவும் பெறுவதில்லை.

திரு. கந்தசுவாமி அவர்கள் சிறந்த சிந்தனையாளனும் கருமவீரனும், மேனாட்டு முறைகள் உண்ணாட்டு விஷயங்களில் ஊடுருவிவருதலையும் கீழ்த்தே நாகரீகம் கபளீகரம் செய்யப்படுவதையும் உணர்ந்தவர். உள்ளூர் ஆட்சி மன்றத்தின் கீழ் இலவச சித்த ஆயுவேத வைத்தியசாலை ஒன்றை யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன் முறையாக ஸ்தாபித்தவர் சேமன் கந்தசாமி அவர்களே. சித்த ஆயுர்வேத வைத்தியத் துறையில் பாரம்பரிய அறிவுடன் ஆயுர்வேதக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற சங்கைக்குரிய டாக்டர் கைலாயபிள்ளையே முதன் முதலாக அவ்வைத்தியசாலைக்கு நியமனம் பெற்று மேற்படி வைத்தியசாலையை நன்கு நடத்தினர்.

திரு. கந்தசுவாமி அவர்கள் நாடு முன்னேற வேண்டுமானால் பொருளாதார ஸ்திரம் பெறவேண்டும் என்பதை உணர்ந்தவர். திருவடிநிலையில் சீனித்தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிக்க முன்னோடியாக நிலரூர் சிறந்த சீவ, தனிரக சுவை, உற்பத்திஇறக்குமதிச் சீனியிலும் சிறிது விலையேற்றம். அரசாகம் உற்பத்திக்கு சாதனையாக இருக்கவில்லை. சிறிதுகாலத்தில் கைவிடப்பட்டது. ஆனால் தன்னிறைவுகாண உற்பத்தி செய்யவேண்டும் என்னும் கொள்கையை வளரு சமுதாயம் ஏற்றுக்கொள்ளச் செய்தனர்.

கல்வியென்பது பொதுச் சொத்து, மக்கள் ஒருவரை ஒருவர் அறியவும் சமாதானமாக வாழ்வும் வாழ்கையை வளம்படுத்தவும் கல்வி எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென்ற பரோபகாரச் சிந்தனையும் தாராளமனப்பான்மையுமுடையவர். திருவடிநிலையைச் சார்ந்தவர் கல்வி பெறமுடியாத நிலையில் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தனர். அம்மக்களும் எங்களுடன் இங்கு இருப்பவர் என்ற உயர்ந்த லட்சியம் படைத்த திரு. கந்தசுவாமி எனது மாமன் முறையினரான இந்தும்பாட் ஸ்தாபகரும் சைவமும் தமிழும் தழைத் தோங்கசெயலாற்றிய வருமான திரு. இராசரத்தினம் அவர்களிடம் என்னையும் கூட்டிச்சென்று அந்த ஒதுக்கப்பட்ட இனத்துக்குப் பாடசாலையொன்று ஸ்தாபித்துக்கொடுக்க வேண்டும் என்று வேண்டினர். சுழிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவராக திரு. கந்தசுவாமியும் செயலாளராக இருந்த நானும் அந்தக் கலவப் பணியில் ஈடுபட வேண்டியிருந்தது. பாடசாலை தொடங்கியது. கல்வ ஒதுக்கல் என்ற குற்றச்சாட்டிலிருந்து எங்கள் கிராமம் புனிதமாக்கப்பட்டது.

இத்துடன் நில்லாது பாற்சபை ஒன்றையும் பல நெசவுசாலையும் தொடக்கி வைத்தார்.

சேமன் கந்தசுவாமி அவர்கள் மற்றச்சங்க சேமன்மாரினைப்போல அவரும் ஒரு உத்தியோகப்பற்ற சமாதான நீதிபதி அவர்களாக இருந்தார்கள். வழிதெருவில் இவர் இவர் சேவையை நாடிவந்தாலும் மறுக்கமாட்டார் உடனே சத்தியக்கடதாசியை முடித்துக்கொடுப்பார். பின் போட்டார். சமாதான நீதிபதி முத்திரையைக் கந்தோரில் குத்திக்கொள்ளுமாறு சேவையைத் தொடருவார் நடையில். இவர் ஒரு நடமாடும் சமாதான நீதிபதி.

இரவு பத்து மணி இல்லை அதற்குப் பின்புமே வீடு சேர்வார். சைவச் சாப்பாடு மாத்திரமே உட்சொள்வார். காலை ஐந்து மணியென்றவுடன் மறுபடியும் நடையில தொடரும் அவர் சேவை. அவரதுவரலாறு ஒரு தொடர் சேவை.

நாட்டுக்காகப் பிரதிபலன் கருதாது உழைத்த உத்தமன். பிறப்பின் லட்சியத்தைநெறிப்படுத்திய சீரியோன். எல்லோருக்கும் இனிய வனுகி இறைவனின் அன்பனுன அருளனன். அவரின் செவ்விய வாழ்க்கைநெறி தொண்டரின் பாதையாத அமையட்டும். அவரின் ஆன்மா சாந்தியடைய பரம்பொருளை வேண்டுதல் செய்வோம். சாந்தி.

அ. சின்னையா,
முன்னாள் பி இ வி
பதிவாளர்.
"பாம் குரேஸ்",
சுழிபுரம்.


வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30

பணயக் கைதிகளை மீட்க நவீன ரக ஆயுதங்களுடன் போராடும்

The Hostage

(Adults only)

லிடோ

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

பிரபு - நளினி நடித்த

புதிய வெளியீடு கலர்

நியாயம்


# 13 பாடசாலைகள் இணைந்து நடத்தும் கண்காட்சி

யாழ்ப்பாணம் புதன்

யாழ். வண்ணார்பண்ணைக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பதின்மூன்று பாடசாலைகள் இணைந்து நடத்தும் கல்விக் கண்காட்சி இன்று 24-ம் திகதி புதன்கிழமையும், நாளை 25ம் திகதி வியாழக்கிழமையும் யாழ் வைத்தீஸ்வரா வித்தியலயத்தில் நடைபெறவுளளது

ஏற்சனவே பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கண்காட்சிகளிலிருந்து சிறந்தவையாக தெரிவு செய்யப்பட்ட காட்சிப்பொருட்கள் இக்கண்காட்சியில் இடம்பெறும்.

யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி நாளை புதன்கிழமை காலை கண்காட்சியைத்திறந்து வைப்பார் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தனும் ஏனைய கல்வி அதிகாரிகளும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

நாளை புதன்கிழமை பிற்பகல் தொடக்கம் பெண்கள் மட்டும் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. [ஆ-இ]

# கும்புறுப்பிட்டியில் அகதிகளுக்கு உதவிநிறுத்தம்; 80 குடும்பங்கள் பாதிப்பு

மூதூர், செவ்.

கும்புறுப்பிட்டியிலுள்ள அகதிகளுக்கு இதுகாலவரை வழங்கிவந்த நிவாரண உதவிகள் கடந்த முதலாந் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் 340 பேரைக் கொண்ட 80 தமிழ் குடும்பங்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்து இளைஞர் பேரவை போன்ற ஸ்தாபனங்கள் இவர்களுக்கு ஓரளவு உதவிகள் செய்து வருகின்றன.

இவர்களின் நிலைபற்றி திருமலை பிரஜைகள் குழு புனர்வாழ்வு அமைச்சருக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது இவ்வாறிருக்க திரியாய் அகதிகள், நிலாவெளி அகதி முகாமில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு இடைநிறுத்தப்பட்ட நிவாரண உதவிகளை மீண்டும் இம்மாதம் வரைக்கும் வழங்கும்படி புனர்வாழ்வு அமைச்சு அரசாங் அதிபரைப் பணித்துள்ளது.

இவர்களுக்கும் இம்மாதம் முதலாந் திகதிமுதல் நிவாரண உதவிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. திருமலைபிரஜைகள் குழு புனர்வாழ்வு அமைச்சுடன் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே மீண்டும் உதவிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (எ)

யாழ். ப. நோ. கூ. சங்கம்

# இயக்குநர்கள் போட்டியின்றி தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர்கள் நேற்று முன்தினம் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் திரு. ச. வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றது.

தலைவர் திரு. வேலாயுதம் தமது தலைமையுரையில்:

தமது காலப்பகுதியில் ஏற்பட்ட துரிதமுன்னேற்றம் காரணமாக உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு செல்மதியாக இருந்த பாரிய தொகையில் இருபது லட்ச ரூபா குறைக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் இரண்டுலட்ச ரூபா செலவில் சங்கத்துக்குச் சொந்தமான இரண்டு லொறிகளை புதிதாகமாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்றும் இக்காலப்பகுதியில் பணியாளருக்குக் கொடுக்கப்பட விந்ருத வாழ்க்கைச் செலவுப்படி 258 ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் இம் முன்னேற்றத்துக்கு சங்கமுகாமைப்ட குதியினரதும் ஊழியர்களதும் ஒத்துழைப்பே காரணமாகும் என்றும் கூறினார்.

புதிய இயக்குநர் சபைத் தெரிவில் தலைவராக திரு வி. முத்துக்குமாரசாமியும் உபதலைவராக திரு. சி சிவசுப்பிரமணியமும், இயக்குநர்களாக திரு. கா. சிவராஜா, திரு. இ. அம்பலவாணர் ஜனுப்எம். எஸ் ஏ. எம் தம்பர், திரு. மா. சிவராஜா, திரு. அ. யூலியஸ் மகேசன் ஆகியோரும்போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர். [இ]

# அரிசி மூடைகள் மாயம்!

வவனியா, செவ்.

81 மூடை அரிசியுடன் மன்னர் வீதி வேப்பங்குளத்தில் வைத்துக் கடத்தப்பட்ட செல்லையா பரமநாதனுக்குச் சொந்தமான லொறி மீட்கப்பட்டுள்ளது.

மேற்படிலொறிகொழும்புக்கு அரிசி ஏற்றிச் சென்ற சமயம் இனந்தெரியாத சிலரினால் ஆயுதமுனையில் சாரதியும், கிளினரும் இறக்கிவிடப்பட்டு அரிசியுடன் லொறி கடத்தப்பட்டது. தற்போது லொறி மீட்கப்பட்டுள்ளபோதிலும் அரிசி மூடைகள் காணப்படவில்லை. [இ]

# அபராதமும் தண்டனையும்

மூதூர் செவ்.

ஹிரோயின் போதை வஸ்து வைத்திருந்த நபர் ஒருவருக்கு திருமலை நீதிவான் சுனில் ராஜபக்ஸ 2000 ரூபா அபராதமும் 8 மாதங்கள் கடும் காவல் சிறைத் தண்டனையும் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறினால் 3மாதம் கடுங் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், உத்தர விட்டார்.

திருமலை மூஸ்லிம் வீதியைச் சேர்ந்த எம். ஏ. எம். நசார் என்பவருக்கே மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

மற்றுமொரு நபரான பீ. விஜயன் என்பவருக்கு 1,500 ரூபா அபராதமும் 6 மாதகால கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதமும் செலுத்தத் தவறினால் மேலும் 3 மாதங்கள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. (எ)


# பிறந்ததின வாழ்த்து



செல்வன் கஜன்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி காபநேற்றர் திருத்தும் நிறுவன உரிமையாளர் நவநீதன் - விக்னேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (24-9-86) கொண்டாடுகிறார். இவரை வாழ்த்துவோர் யாபேரும், பல்கலைகளும் கற்று நாடு போற்றும் உத்தமனாக பல சீர்வரிசைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்கள். C 4779

# சட்டவிரோத மின்பாவனை:

## பிரஜைகள் குழு வேண்டுகோள்

நெல்லியடி, செவ். நெல்லியடிப் பட்டினசபைப் பிரதேசப் பாதுகாப்புச் சபையின் வேண்டுகோளுக்கிணங்க, நெல்லியடி, கரவெட்டி, துன்னாலை ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை குறிப்பிடக்கூடியளவு குறைந்துள்ளது.

ஆனாலும் பொறுப்புவாய்ந்த சிலரும் அவர்களோடு சேர்ந்தோரும் தொடர்ந்து இச்சமூக விரோதச் செயலில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. இதனால் இப்பகுதியிலுள்ளசிறு கைத்தொழிற் சாலைகள், அரிசி ஆலைகள், வைத்தியசாலைகள், விவசாயப் பண்ணைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகிறன. இதுபற்றி தொடர்ந்துமுறைப்பாடுகள் வந்துகுவிந்த வண்ணமிருப்பதால், தொடர்ந்து சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டிருப்போர் உடனடியாக தங்கள் சமூகவிரோதச் செயலை நிறுத்தவேண்டுமென்று நெல்லியடி பிரஜைகள்குழு நிறைவேற்றுச் செயலாளர் திரு ஜே. ஜீ. சிவசேந்திரம் மீண்டும்பொது மக்களை வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோளை நிராகரிப்போர் அதன் சமூகவிளைவுகளுக்குப் பொறுப்பானவர்களெனக் கருதப்படுவரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### ஊழியர் சேமலாபநிதி

# கணக்குப் புத்தகங்கள் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், புதன்

தொழில் திணைக்கள ஊழியர் சேமலாப நிதிப்பிரிவினால் வழங்கப்படும் ஊழியருக்கான ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு புத்தகங்கள் வழங்கும் வைபவம் யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் 27ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராக இவ் வைபவத்தில் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணம் உதவித் தொழில் ஆணையாளர் திரு. என். தியாகராசா வரவேற்புரையும், உதவித் தொழில் ஆணையாளர் திரு. என் சி. இராசநாயகம் ஆரம்பஉரையும் நிகழ்த்துவார்கள்.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, யாழ். வர்த்தக சங்கத் தலைவர் திரு ஏ. கே. நடராசா, ஊழியர் பிரதிநிதி திரு ரி. சிவலிங்கம், கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன், தொழில் உத்தியோகத்தர் திரு. ரி. தர்மராசா ஆகியோரும் உரையாற்றுவார்கள், ஊழியர்களுக்கான கணக்குப் புத்தகங்களும் வழங்கப்படும். ஊழியர்கள் கூட்டத்திற்கு வரும்போது தேசிய அடையாள அட்டையையும் எடுத்து வரும்படி கேடகப்பட்டுள்ளனர். (இ)

# வடமாநில பாடசாலைகளின்

## ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், புதன்

வடமாநிலப்பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டி முடிகள் வருமாறு:

பிரிவு 2 - ஆண்டு 4

பாத்திர நாடகம்

நல்லூர் ஸ்ரேசன் சி. சி. ரி. எம். எஸ்., கந்தரோடைதமிழ் கந்தையா வித்தியாலயம், சென் அன்ரனிஸ் ஆர்.சி.ஜி. எஸ். வித்.

பா ஒதல்

ஆர். வாசுகி வீமன்காமம் ம. வி., ஆர். பிரியதரிசினி வட்டு திருஞானசம்பந்தர்வித், கே. ஜனனி சென்மேரிஸ்ம வி.

உரத்து வாசிப்பு

கே. விஜிதினி மாதகல் சென் யோசப்ஸ் ம.வி., ரி. குமுதினி நாயன்மார்கட்டு மகேஸ்வரி ம.வி., ஏ. அஜிதா மட்டுவில் தெற்கு எ.எம்.ரி.எம்.எஸ்.

பாலர் பாஒதல்

வீமன்காமம் ம.வி., சங்கானை சிவப்பிரகாச ம.வி., சென் ஆன்ஸ் ஆர்.சி.ரி.எம். எஸ்.

பிரிவு 2 - ஆண்டு 5

சொல்வதெழுதல்

ஜி யூட் ரிரோன் சில்லாலை ஆர்.சி.ரி.எம்.எஸ்., ரி. சுதர்மணி சென்மேரிஸ் ம.வி., ரி. பத்மலோயினி மாதகல் சென்யோசப்ஸ் ம.வி.

எழுத்து

வி. கல்யாணி இளவாலை மெய்கண்டான் ம.வி, கே. தர்மினி கந்தரோடை தமிழ் கந்தையா வித், கே. புஸ்பவதனு கோப்பாய் சரவணபவானந்தா வித்

உரத்து வாசித்தல்

பி. சரவணபவான் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித், ஜ. சுதர்மினி சென்மேரிஸ் ம.வி. கே. பிரிந்திகா பொலிகண்டி ஏச்.எம்.ரி.எஸ்

பாத்திர நாடகம்

கொக்குவில் சிறிஞானபண்டித வித், வண். நாவலர் ம.வி, இளவாலைமெய்கண்டான் ம.வி

பா ஒதல்

ஜி கிருஸ்ணகுமார் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, எஸ். மைதிலி சென் மேரிஸ் ம.வி, ரி. ஸ்வர்ணகுமார் இளவாலை மெய்கண்டான் ம.வி.

அபிநயப்பா

வீமன்காமம் ம.வி, சென் மேரிஸ் ம.வி, சென் ஆன்ஸ் ஆர் சி ரி.எம்.எஸ். மானிப்பாய்.

பிரிவு 2 - ஆண்டு 6

சொல்வதெழுதல்

ஆர். தேவகி புலோலிம.வி, ஜி. காஞ்சனா கைதடிமுத்துக்குமாரசாமி ம.வி, ரி. பி. கவிதா சென் ஆன்ஸ் ஆர். சி. ரி. எம். எஸ். மானிப்பாய்.

எழுத்து

ரி. பத்மலோஜினி கந்தரோடை தமிழ்கந்தையா வித், எ. அஜந்தினி கொக்குவில் கிழக்கு ஆர்.கே.எம்.வித், ரி. சிவாஜினி கந்தரோடை தமிழ் கந்தையா வித்.

உரத்து வாசித்தல்

ஜி காஞ்சனாகைதடிமுத்துக்குமாரசாமி வித், எஸ். தர்சனன் கந்தரோடை தமிழ் கந்தையா வித், பி. யோகநாயகம் மாதகல் சென்யோசப் ம.வி, கே. சசிகலாதேவி வத்தராவத்தை விக்கினேஸ்வரா வித்.

குழுப்பாட்டு

சென் ஆன்ஸ் ஆர் சி.ரி.எம். எஸ், மானிப்பாய், சென் மேரிஸ் ம வி, கோண்டாவில் மேற்கு ஏச் எம்.வி.

பாத்திரநாடகம்

சென்சோசப்ஸ் ம வி மாதகல், கந்தரோடை தமிழ் கந்தையா வித், நல்லூர் ஸ்ரேசன் சி.சி. ரி.எம்.எஸ்.

பா ஓதல்

எம் ஹேமலதா சென் ஆன்ஸ் ஆர். சி ரி. எம். எஸ். டீ. சாள்ஸ்ஆனந்த் இளவாலை மெய்கண்டான் ம.வி, ரி.சிவப்பிரசாந்தி புலோலி ம.வி.

பிரிவு 2 - ஆண்டு 6

அபிநயப் பாட்டு

சின்மயபாரதி வித், சென் மேரிஸ் ம வி, நல்லூர் இந்து பெண்கள் ரி.எம்.எஸ்.

பிரிவு 2 - ஆண்டு 4

நாடகம்

சென் அன்ரனீஸ் ஆர்.சி.ஜி. எஸ் பாசையூர், சென்ஆன்ஸ் ஆர்.சி ரி எம்.எஸ்., மாதகல் சென் யோசப்ஸ் எம்.வி.

ஆண்டு 7, 8

நாடகம்

கந்தரோடை தமிழ் கந்தையா வித், நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித், கோப்பாய் சரவணபவானந்த வித்.

ஆண்டு 9, 10

நாடகம்

சென் அன்ரனீஸ் ஆர்.சி.ஜி. எஸ். பாசையூர், கோப்பாய் சரவணபவானந்த வித்,

ஆண்டு 11, 12

நாடகம்

சென் அன்ரனீஸ் ஆர்.சி. ஜி. எஸ்.பாசையூர்.

(மிகுதி நாளை)

# இன்றைய பலன்

மாதம்:- புரட்டாதி
திகதி:- 8 [24-09-86]
கிழமை:- புதன்
நட்சத்திரம்:- ரோகினி

மேடம்:- எதிர்பாராதமுனையில் இருந்து ஆபத்துக்கள் உருவாகும் நம்பிக்கை மோசடியும் நடக்கும். பணவிரயத்திற்குமிடமுண்டு. அவதானம்

இடபம்:- எதிர்பார்த்தவிடயத்தில் ஏமாற்றம் தாக்கும். அவசரப் போக்கினால்பகைகள் தேன்றலாம். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைஅணைத்துக்கொள்வீர்கள்,

மிதுனம்:- புதுத் தொழில் முறைகளை மனம் நாடும். பொதுசனத் தலைமையும் கிட்டும். களஸ்திர வழியாலும் நன்மைகள் வந்துசேரும்.

கடகம்:- கடன் படவும் நேரிடும். உடன் பிறந்தவர்களாலேயே பிரச்னைகள் உருவாகலாம். கடமையாற்றுமிடத்தில் கவனம்வேண்டும.

சிங்கம்:- பரோபகாரச்சிந்தை மேலிடும். புதுமனை வாழ்வும் கிட்டும். கருத்தொருமித்த காதலர் வாழ்விலும் நன்மையானவிடயம் இடம்பெறும்.

கன்னி:- குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியளிக்கும். வருமானத்திலும் உயர்ச்சியுண்டு. இன்று முன்னனியில் நிற்பீர்கள்.

துலாம்:- உணர்ச்சிமயமான மனப் போராட்டங்கள்தோன்றும். வெளியிடத்துச் செய்தியொன்று கவலையைத்தரலாம். மனத்திடம்வேண்டும்.

விருச்சிகம்:- உழைப்பில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள்கனவு இன்று நனவாகும். மாணவர்கள் கல்வி முன்னேற்றமடைவர்.

தனுசு;- தொழில் மந்தநிலை காணும். குடும்பத்திலும் பிளவுகள் தோன்றலாம். பொன் பொருள் விரயமுமுண்டாம். பொறுமை நன்று.

மகரம்:- பிதாவழிப் பெருமையுண்டு. சிலருக்குதலைமைப் பீடமும் கிடைக்கும். புதுமையான எண்ணங்களும் தலைதூக்கலாம்.

கும்பம்:- மனம்போல் வாழ்வும் இன்று மலரும். வாகன விருத்தியுண்டு. இடப்பிரிவுகளும் நன்மைதரும். மகிழ்ச்சிகரமான தினம்.

மீனம்:- இருதொழில் விருத்தியுண்டு. பெரியோர் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். வாழ்வுப் பாதையில் வளமான திருப்பமும் தோன்றும்.

திருமலை
வேலுப்பிள்ளை


மிது வீடியோ மூவிசாரின்

## இன்றைய புதிய வெளியீடு

கவுண்டமணி, இளவரசி, செந்தில்
நடித்த

# ஒரு நல்லவன் ஒரு வல்லவன்

(தரமான பிரதி)

## மிது வீடியோ மூவிஸ்

பிரதான வீதி, சித்தங்கேணி.

(A 1354)

## பிரயாண ஒழுங்குகள்

குவைற் — கொஸ்பிற்றல் கிளீனேர்ஸ்
லிபியா — லேபறேஸ் - ஒயில் கொம்பனி
டோகா — SALESMAN, SECRETARY
MECHANIC (Diesel)
CIVIL ENGINEERS,
QUANTITY SURVEYERS
ACCOUNTANTS (Fully Qualified)

மேற்படி பதவிகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். உடன் பாஸ்போர்ட் மற்றும் பத்திரங்களுடன் நேரில் சந்திக்கவும்.

V. SIVASAMBU
(SHIVA MASTER)
EMPLOYMENT CONSULTANT,
EARLALAI SOUTH,
CHUNNAKAM.

(C-4792)

## விற்பனைக்கு

29 Sri 4778 இலக்க, 41 ஆசனங்கள் கொண்ட பஸ்

இவ்வாகனத்தை, 1600, கொட்டா வீதி (Cotta Road), இராஜகிரியா; கொழும்பு, றவீந்திரா (Ravindra) கராஜில் பார்வையிடலாம்.

இதனை வாங்குவதற்குரிய கேள்விப்பத்திரங்கள், தபாலுறையின் இடது மேற்பக்கத்தில் "விற்பனை" என்று எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அலலது நேரில் 08-10-86 புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

## மேர்ச்சன்ற் பினன்ஸ் லிமிட்டெட்,

1-ம் மாடி, கட்டம் II,
நவீன சந்தைக் கட்டிடம். யாழ்ப்பாணம்
தொலைபேசி: 24183

[A-1351]

## trust travel service

No 11/A, மொம்சாக் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
T. P.: 24111

மத்திய கிழக்கின் சவுதி அரேபியாவில் கீழ்வரும் பிரயாண வாய்ப்புகளுக்கு இடவசதிகள் தலைமைக் கந்தோரின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படுகின்றன

எலக்ரீசியன், எயார்கொன்டிசன் மெக்கானிக், கார்ப்பென்றர், மேசன், பிளம்பர், இரும்பு வேலை, வெல்டர், பெயின்றர், கார் மெக்கானிக், சமையல் தொழில் (கீழைத்தேச, மேலைத்தேச உணவு வகைகள்)

[மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.]

மற்றும் உங்கள் விமான டிக்கட்டுகளுக்கும்: P. I. A. - AERO FLOT - C. P. எயர் - எயர் லங்கா ஆகிய விமான கம்பனிகளின் குறைந்த விலை டிக்கட்டுகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள்.

[A-1353]

# “சோவியத்-அமெரிக்க நவம்பர் உச்சி மகாநாடு ஆக்கபூர்வமாக இருக்கும்”

## ஐ. நா.வில் றீகன் உரை

நியுயோர்க், செப். 23

“சோவியத்-அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாடுகள் குறித்த பேச்சுக்களில் திருப்திகரமான விளைவுகளை எதிர்பார்க்கமுடியும்” என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் 41- வது பொதுச் கூட்டத் தொடரில் அதிபர் றீகன் நேற்று உரைநிகழ்த்தினர். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு றீகன் மேலும் பேசுகையில்; சோவியத் அதிபர் திரு கோபச்சேவுடன் எதிர் வரும் நவம்பரில் தாம் நடத்த வுள்ள பேச்சுக்களில் ஆக்கபூர்வமான விளைவுகளை எதிர் பார்க்கமுடியும்” என்றார்.

அணு சக்தி களஞ்சியங்கள், ஏவுகணைகள் மற்றும் தளங்களின் கட்டுப்பாடுகளைக் கொண்டுவருதல் உட்பட ஆயுதப் பெருக்க நடவடிக்கைகளில் குறைப்பை மேற்கொள்ளும்வகையில் அப் பேச்சுக்கள் திருப்தியளிப்பனவாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

‘நட்சத்திரப்போர்’ என்ற நவீன போர்த்திட்டம் பற்றி அவர் பிரஸ்தாபிக்கையில் “அதில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு சோவியத்தின் கவனத்துக்கு விடப்படும்” என்றார்.

சோவியத் யூனியனில் உளவுக் குற்றச் சாட்டுத் தொடர்பாக கைதாகியுள்ள அமெரிக்க பத்திரிகையாளர் டானிலோப்பை சோவியத் அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## பர்மா பஜாரில் கைகலப்பு 70 பேர் காயம்

சென்னை, செப். 23

சென்னையில் பர்மா பஜார் என்ற பிரபல வியாபாரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கைகலப்பில் 70 பேர் வரை காயமடைந்தனர்.

பர்மா பஜாரில் கள்ளக் கடத்தல் பொருள்களை கைப்பற்றும் வகையில் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த கைகலப்பு இடம் பெற்றது.

சென்னை பொலிஸார் இக் கைகலப்பின்போது பலத்த கல்வீச்சு இடம்பெற்றதை யடுத்து தடியடிப் பிரயோகத்தில் இறங்கினர் அப்போதே 40 பொலிஸார் உட்பட 70 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்ட நேர பொலிஸ் நடவடிக்கையின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## உலகச் செய்திகள்

சோவியத்தில்

## விமான கடத்தல் நாடகம் ஆறு பேர் பலி

மாஸ்கோ, செப் 23

சோவியத் யூனியனில் கடந்த சனிக்கிழமை ‘ஏரோ புளொட்’ விமானமொன்று கடத்தல் நடவடிக்கைக்குள்ளானது.

இக்கடத்தல் சம்பவத்தில் இரு கடத்தல்காரர்கள் உட்பட ஆறுபேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

போதைவஸ்த்து உட்கொண்ட இரு நபர்களே இந்த விமானக்கடத்தலில் ஈடுபட்டனர். மத்திய சோவியத் மாநிலமானயூரல்மலை பகுதியை அண்டிய ஊவா என்ற இடத்திலிருந்து கியா என்ற இடத்துக்கு பிரஸ்தாப ஏரோ புளொட் விமானம் உள்ளூர்ச்சேவையில் ஈடுபட்டிருந்தது.

67 பயணிகள் அவ்விமானத்திலிருந்தனர்.

கடத்தல்காரர்கள் டாக்ஸி ஒன்றில் ஊவா விமானநிலையம் வந்து துப்பாக்கி முனையில் விமானத்துக்குள் ஏறினர்.

தொடர்ந்து அவர்கள் அவ்விமானத்தைக் கடத்த முற்பட்ட சமயம் சோவியத் பாதுகாப்பு அதிகாரிகள் விமானத்தினுள் புகுந்து கடத்தல்காரர்கள் இருவரையும் சுட்டுக் கொன்றனர். இந்த சூட்டுச் சம்பவத்தில் 4 பயணிகளும் கொல்லப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கின் படுகொலைகளை எதிர்த்து குரல் கொடுப்போம் -மறுமலர்ச்சிக் கழகம்

யாழ்ப்பாணம், புதன்

“நாம் எவ்வளவு தூரம் நமது மண்ணின் அவலங்களை எதிர்த்து போராடுகின்றோமோ, அவ்வளவு தூரம் சர்வதேச ரீதியில் எதிரியின் கொடூரம் வெளிப்படுத்தப்படும். இந்த வகையில் கிழக்கு மண்ணின் படுகொலைகளை, அவலங்களை எதிர்த்துக் குரல் கொடுப்போம்.”

கிழக்கு மாகாணப் படுகொலைகள் தொடர்பாக மறு மலர்ச்சிக் கழகம் “கிழக்குப் பிராந்தியங்களில் நடைபெற்று வரும் பாரிய இனப் படுகொலைகளை சர்வதேச ரீதியில் அம்பலப் படுத்துவோம்” என்ற தலைப்பில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

[7ம் பக்கம் பார்க்க]

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக:

## எம்.ஜி.ஆர். பிரதமர் ராஜீவை சந்தித்துப் பேசுவார்

புதுடில்லி செப் 23

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழக முதல்வர் எம் ஜி. ராமச்சந்திரன் புதுடில்லியில் சந்தித்து இலங்கை இனப்பிரச்னை பற்றி விவாதிக்கவுள்ளதாக ராஜதந்திரவட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது இச்சந்திப்பு இவ்வார இறுதியில் அல்லது அடுத்தவார முற்பகுதியளவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நியூயோர்க் மருத்துவமனை ஒன்றில் மருத்துவ பரிசோதனைகளுக்காளாக்கப்பட்டுவரும் திரு. ராமச்சந்திரன், இவ்வார இறுதியில் தமிழகம் மீள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகம் செல்லும் வழியில் அவர் புதுடில்லியில் மூன்று தினங்கள் தங்கி நிற்பார்.

இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி இலங்கை இனப்பிரச்னைக்கு அமைதித் தீர்வொன்று காணுவதற்கான வழி வகைகளை திரு. ராமச்சந்திரனுடன் பிரதமர் காந்தி ஆராய்வார் என இந்த ராஜதந்திரவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### காளிமுத்துவின் கத்தி பறிமுதல்

டெல்லி செப். 23

தமிழக அமைச்சர் காளிமுத்து வைத்திருந்த கத்தியை டில்லி விமான நிலைய அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தமிழக முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் தமது தொண்டர்கள் பாதுகாப்புக் கருதி கத்தியை வைத்திருக்கலாம் என அறிவித்ததைத் தொடர்ந்து அமைச்சர் காளிமுத்து பயணப் பெட்டியின கத்தியை எடுத்துச்செல்வது வழக்கம். இவர் டில்லி விமான நிலையத்தில் விமானம் ஏற முயன்ற போது விமானப்பயணிகள் கத்தியை எடுத்துச் செல்லக்கூடாதென விமான நிலைய அதிகாரிகள் கத்தியைப் பறிமுதல் செய்தன. (கை)

# தென் லெபனான் நோக்கி இஸ்ரேல் படைகள் நகர்வு

லண்டன் செப் 23

தென் லெபனான் நோக்கி இஸ்ரேலிய துருப்புகள் நகர ஆரம்பித்துள்ளன.

இஸ்ரேலிய ஆதரவு பெற்ற தென் லெபனான் இராணுவப் பிரிவுக்கு தீவிரவாத லெபனான் முஸ்லிம் கெரில்லாப் பிரிவிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையடுத்தே இஸ்ரேலியப் படைகள் இந்தலெபனான் ஊடுருவலை ஆரம்பித்துள்ளன.

டாங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் புல்டோஸர்கள் சகிதம் இஸ்ரேலியப் படைகள் தென் லெபனான் நோக்கி நகர்கின்றன.

கடந்த சிலவாரங்களாக இஸ்ரேலிய ஆதரவு பெற்ற தென் லெபனான் இராணுவப் பிரிவு லெபனான் தீவிரவாத முஸ்லிம் பிரிவுகளின் தாக்குதலுக்குள்ளாகியிருந்தது

இஸ்ரேல் கடந்த வருடம் லெபனானிலிருந்து வாபஸான போது போட்டிருந்த பாதுகாப்பு வலயத்தையும் மீறியே இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனையடுத்தே இந்த இஸ்ரேலிய படையெடுப்பு இடம் பெறுகிறது.

பெருமளவிலான இராணுவ நடவடிக்கைகளில் இஸ்ரேல் இறங்காதென்றும், ஆயினும் பலத்த தாக்குதல்கள் எதுவும் இடம்பெறும் பட்சத்தில் தகுந்த பதிலடி கொடுக்கப்படுமென்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### மணவாளகோல விழா

பளை, செவ்

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயக ஆலய மணவாளக் கோலவிழா ஆலய கிரியைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நடராசக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

பகல் விஷேட அபிசேகமும் பஜனையும் இடம் பெற்றது. ஆலய பரிபாலன சபை டாக்டர் க. நசிவாயம் திரு. எஸ் சோமசுந்தரம், சரசாலை இந்து இளைஞர் மன்றத் தலைவர், திரு. திரு. ஞானேஸ்வரன் ஆலயபரிபான சபை செயலாளர், ஆசிரியர் க. செல்லத்துரை ஒய்வுபெற்ற ஆசிரியர், வை. சரவணமுத்து யாழ். மாவட்ட இந்து இளைஞர் மன்ற உறுப்பினர், சிவசங்கரநாதன் உட்படபலர் உரையாற்றினார்கள்.


## பிரயாண ஒழுங்குகள்

★ சிங்கப்பூர்: (கட்டிடப்பகுதி லேபறேஸ்)
★ சிங்கப்பூர்: (கவுஸ் மெயிட்ஸ்)
★ லிபியா: (ஓயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்: (கவுஸ் மெயிட்ஸ்)
★ குவைத்: (பெண் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்)
★ குவைத்: (ஆண் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்)
★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வருமான ஒழுங்குகள்பெற விரும்புவோர்

உடனடியாக 7 படம், பாஸ்போட்
முதலிய ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங்
உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக,
ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1338)



## பிரயாண ஒழுங்குகள்

★ சிங்கப்பூர்: (கட்டிடப்பகுதி லேபறேஸ்)
★ லிபியா:- (ஓயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்:- (பெண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
★ குவைத்:- (ஆண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
★ குவைத்:. (கவுஸ் மெயிட்ஸ்)
★ சிங்கப்பூர்:- (கவுஸ் மெயிட்ஸ்)
★ குவைத்:- (மெயின்ரெனன்ஸ் கிளீனேஸ்)

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு வருமான ஒழுங்குகள் பெற உடனடியாக 7 படம், பாஸ்போட் முதலிய ஆவணங்களுடன் எங்களை நேரில் வந்து சந்திக்கவும்,

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

இணுவில் ஆஸ்பத்திரி முன் ஒழுங்கையால் வரவும்.

(A 1339)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்
# முன்னோடி பரீட்சை
## ஞாயிறு நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் வடமாகாண ரீதியில் புதிய மத்தியஸ்தர்களை தெரிவு செய்யும் முகமாக அண்மையில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு, ஆயத்தம் செய்யும் முகமாக, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 'முன்னோடிப்' பரீட்சை ஒன்றை நடாத்தவிருக்கிறது.

இம்முன்னோடிப் பரீட்சை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் மேற்படி நிகழ்ச்சிக்கு, சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண பிதா மைக்கல் ஜோசப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக, யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் திரு. வி. கே. ஆறுமுகம் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் ஏ. எச். கமீம், சென். சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் திரு. ஏ. ஐ. எல். குணநாயகம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. எம். ராமலிங்கம், யாழ். மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எம். மரியதாஸ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

முன்னோடிப் பரீட்சையில், உடல் தகுதிப் பரீட்சையும், எழுத்துப் பரீட்சையும் நடைபெறுமெனவும், இப்பரீட்சைக்கு வடமாகாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவிருப்பதாக, யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார். (வி)

## மாகாண...

[1ம் பக்க தொடர்ச்சி]

மட்டக்களப்பின் படுவான் கரையில் பத்தாயிரம் பேர் வரை காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். உணவுப் பொருட்கள் எடுத்துவந்த வள்ளங்கள் ஹெலிகொப்டரினாலும், பம்பரினாலும் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டுள்ளன. கட்டடங்கள், ஆலயங்கள் ஆயுதப் படையினரால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. ஆயிரம் ஏக்கர்வரையில் விவசாயவிளை நிலங்கள் நீர்ப்பாய்ச்சமுடியாமல் அழிகின்றது.

திருகோணமலையில் 400க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அன்புவழிபுரம், பாலையூற்றுபோன்ற எம்மவர் வாழ்ந்த கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன. மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தலாவாக்கொல்லை, பூண்டுலோயா போன்ற மலையக மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் புதிய சிங்கள குடியேற்றங்களால் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

வெலிக்கடை, பூஸாபோன்ற சித்திரவதை முகாங்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் எமது இளைஞர்கள் 46 பேர் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடுமைகளையும், கொலைகளையும் எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். அவர்களில் இருவரின் நிலை உயிரிழக்கும் கட்டத்திற்கு வந்துள்ளது.

வசாவிளானில் கைதான 50 பேர் பற்றிய கதை மர்மமாகவே நீடிக்கின்றது.

சர்வதேச நியாயங்களையும் மீறி வைத்தியசாலைகள் மீதும் இராணுவத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதனால்வைத்தியர்கள் மருத்துவசேவையில் ஈடுபட முடியாதநிலை உருவாகியுள்ளது.

இவை மட்டுந்தானா? அல்ல இவற்றின் தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்கள் முற்றாக தனதுஆக்கிரமிப்புக்கு உட்படுத்தி விட வேண்டுமென்ற செயற்பாடுகளையும் முடுக்கி விட்டுள்ளது. மன்னாரில் இராணுவப் பாதுகாப்புடன் சிங்களம் பேசும் மக்களை குடியமர்த்தி, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து முன்பு தோல்வி கண்ட முயற்சிகளை மீண்டும் நடைமுறைப்படுத்தியுள்ளது. கடல் வலைய சட்ட மூலம் தமிழ்பேசும் மீனவர்களின் மீன்பிடித்தொழிலை முற்றாக முடக்கிவிட்ட பின்பு தனது கடற்படையின் பாதுகாவலுடன் ஆயுதப் பயிற்சி பெற்ற சிங்கள கடற்றொழிலாளர் அத்தொழிலில் ஊக்குவிப்பதன் மூலம் ஆக்கிரமிப்பை நிலைநிறுத்த முயல்கின்றது. இதே போன்ற தன்மையிலேயே ஆயுத பாணிகளாக்கப்பட்ட சிங்களக் காடையர்களை குடியமர்த்துகின்றது. ஈழத்தின் மத்திய பிரதேசமான பதவிளா நீர்ப்பாசனத் திட்டத்தை சுற்றி கொக்கிளாய், நாயாறு, வவனியாவின் கென் பாம், டொடலர் பாம் போன்ற இடங்களில் நிறுவப்பட்டு வரும் ஆயுதம் தரித்த சிங்களக் காடையர்களின் குடியேற்றத்தினூடாக எமது தாயகத்தின் ஒருமைப்பாட்டை துண்டித்துவிட கங்கணம் கட்டிநிற்கின்றது சிறீலங்கா அரசு.

இந்த மண்ணுடன் கலந்து ஐக்கியமாகி வாழ்ந்து வரும் எம்மவரிடையே பிரதேச மத வேறுபாடுகளைத் தூண்டி ஒன்றுபட்ட எம்மை பலவீனப்படுத்தி ஈழப்போராட்டத்தை சிதறடிக்க முயல்கிறது இந்த அரசு. அல்பத்தா, ஜிகாத், கிஜ்ரா, போன்ற பெயர்களில் இஸ்லாமிய மக்களின் நலன்களை பாதுகாக்கிறோம் என்ற போர்வையில் சில சமூக விரோதக் கும்பல்களை ஊக்குவித்து போராட்டத் தன்மையில் ஒரு நச்சுத் தன்மையைக் கலக்கின்றது. தென் ஈழப் பகுதியில் தோல்வி கண்ட இச்சதிவேலை இப்போது மன்னார்ப் பகுதிக்கு புதிதாக அறிமுகப் படுத்தப்படுகின்றது.

ஈழத்தின் எல்லாப் பகுதியிலும் அழுகைக் குரல்களும் மரண அவஸ்தையும் தொடர்கதையாய் மாறி உள்ளது. வெறுமனே மௌனமாய் கண்ணீர் வடிக்கப் போகிறோமோ? எமது உள்ளத்து எதிர்ப்புக்களையும், உள்ளத்து உணர்வுகளையும் அரச அடாவடித்தனங்களுக்கான எதிர்ப்பையும் வெளிக்காட்ட அணி அணியாய்த் திரள்வோம். துன்பப் படுவோரின் துயரத்தில் பங்கேற்க ஆயிரமாய் வருக என அறை கூவுகின்றோம். (இ)

## மழைப்பதிகம்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆரம்பித்து வைப்பார்.

வருடா வருடம் திருமுறை மன்றத்தினர் இவ் வழிபாட்டை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்கின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

''காலத்திற்குக்காலம் ஸ்ரீலங்கா அரசினால் தமிழீழ எல்லைப் பிரதேசங்களில் நன்கு திட்டமிட்ட முறையில் இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கைகளின் நோக்கம் மக்களை உள ரீதியாகப் பலவீனப்படுத்தி எமது போராட்டத்தினை மழுங்கடிக்கச் செய்தலே.

''அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணப் பகுதிகளில், குறிப்பாக உடும்பன்குளம், திருக்கோயில், மண்டூர், படுவான்கரை, மட்டக்களப்பு நகர், ஆகிய பகுதிகளில் இழப்பதற்கு எதுவுமேயற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை ஸ்ரீலங்கா அரசு மிருகத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் படுகொலை செய்ததுடன் விமானமூலம் குடியிருப்புப் பிரதேங்களில் குண்டுகளைப் பொழிந்தும் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

''ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை எனும் போலிவேடத்தை போட்டுக்கொண்டு உலகளாவிய ரீதியில் பிரசார வேலைகளில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை செய்தித் தொடர்புகள் குறைந்த எல்லைப்புறங் கிராமங்களில் திட்டமிட்டு பாரியளவில் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந் நடவடிக்கைகளை சர்வதேச ரீதியில் வெளிக்கொணர்வது எமது போராட்டத்தின் தவிர்க்க முடியாதது இதனை உணர்த்தி எதிரியை பலவீனப்படுத்தி உலக நாடுகளில் இருந்து வெற்றிக்கான பல்வேறு உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு ஆதாரமாகக் குரல் கொடுப்போம்.'' (ரா)

# அரசின் தபால்தலை ஒட்டப்பட்ட கடிதங்களுக்கு குடாநாட்டில் தடை
## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பணம், செவ்,

''சிறிலங்கா அரசின் தபால் தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்கள் யாழ். குடா நாட்டுக்குள் பரிவர்த்தனையிலிருந்து ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியால் தடை செய்யப்பட்டுள்ளது.''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நெடுந்தீவு தபாற்கந்தோருக்கு அனுப்பப்பட்ட தபாற்பைகள் கடற்படையினரால் சோதனையிடப்பட்டன. அப்போது ''ஈழம் தபால் தலைகள்'' ஒட்டப்பட்ட கடிதங்களும் தபாற்பையில் இருந்தன. இவற்றை ஆச்சரியத்துடன் பார்வையிட்ட கடற்படையினர் தபால்களை மீண்டும் தபால்பைகளுக்குள்ளேயே வைத்து விட்டனர் அது உரிய விலாசங்களுக்கு சென்றடைந்தன.

''ஈழம் தபால் தலை'' புழக்கத்தில் வரும் மட்டும் சிறீலங்கா அரசின் தபால் தலைகள் யாழ். குடா நாட்டுக்குள் முற்றாக தடுக்கப்படவில்லை. இப்போது தனியார் கடைகளிலும், வேறு இடங்களிலும் ''ஈழம் தபால் தலைகள்'' விற்பனை செய்யப்படுகின்றன. எனவே ஒரு வாரத்திற்குள் சிறீலங்கா அரசின்தபால் தலைகள் யாழ். குடா நாட்டுக்குள் பரிவர்த்தனையில் இருந்து தடை செய்ய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முடிவெடுத்துள்ளது. (இ)

## கோரிக்கை

மன்னார், செவ்

பாடசாலைகளில் அதிபர்களாக நியமிக்கப்படுபவர்களுக்குஏதாவதுஓர்தரம் இருக்க வேண்டும். அல்லது மூப்பு அடிப்படையிலாவது அதிபர்களின் நியமனம் அமைய வேண்டும் என்றும் எக்காரணம் கொண்டும் அதிபர்தரம் சித்தியடையாதவர்கள் அல்லது சிரேட்ட ஆசிரியர்ஒருவர் இருக்கும் அப் பாடசாலையில் கனிஷ்ட ஆசிரியரைஅதிபராக நியமிப்பது வருத்தத்துக்குரியது என்றும் ஆட்சேபனை ஒன்றை மன்னார் தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## முதுகலைமாணி பட்டம் பெற்றார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. வ. உமாபதிசிவம் இந்து நாகரீகத்தில் முதுகலைமாணி [எம். ஏ] பட்டம் பெற்றுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்புளோமாப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் இந்து நாகரீக டிப்புளோமாப்பட்டத்தையும் பெற்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டிருந்தார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுகாதார அலுவலர் திரு. மயில்வாகனம் வல்லிபுரம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரான இவர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். (சி)


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதி

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்து உள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்லவிரும்பும் ஆண்கள், பெண்கள் உங்களை எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச்செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும். சென்ற மாதம் சவூதிக்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் இம்மாதம் 18-ம் திகதி சவூதி சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்பு:-
**N. பாலா**

பஸ் இல. 764,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஓமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ ஓமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் குப்பிளான் சந்திக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1355]

## பிரயாண ஒழுங்குகள்

★ அமெரிக்கா ★ கனடா
★ அவுஸ்திரேலியா ★ பிரான்ஸ்
★ ஜேர்மனி

மற்றும் எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும்
குறைந்த கட்டணத்தில் பயண ஒழுங்குகள்
செய்து கொடுக்கப்படும்.

நாம் ஒழுங்கு செய்யும் எல்லா நாடுகளுக்கும்
எமது பிரதிநிதி நேரடியாக உங்களை
உங்கள் நண்பர்/உறவினர் முகவரிக்கு
அழைத்துச் செல்வார்.

**பிரான்ஸ், ஜேர்மனி, கனடா**

செல்ல விரும்பும் பெண்கள், குழந்தைகள்
பாதுகாப்பான முறையில் குறுகிய காலத்தில்
எமது பிரதிநிதியால் அவர்கள்
உறவினர்கள் முகவரிக்கு
அழைத்துச் செல்லப்படுவார்கள்.

முழுவிபரங்களுக்கும்:
தமிழ்நாடு, சென்னை, வசந்த் ஏஜன்சீஸ்,
நிர்வாகி அவர்களை

22-9-1986 to 30-9-1986 வரை 9 a. m. to 4 p. m
(சனி, ஞாயிறு உட்பட)

பின்வரும் முகவரியில் சந்திக்கவும்;
**14, ஜூபிலி பசார்,**
யாழ்ப்பாணம்.

(C 4800)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 24-9-86

### உண்ணாவிரதப்போராட்டத்தின் எதிரொலி!

# சகல பரீட்சைகளையும் பகிஷ்கரிக்க யாழ். பல்கலைக்கழக மாணவர் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

வெலிக்கடையிலும் 'பூஸா' விலும் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் குறிப்பிட்டபடி நாளை 25-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருப்பதால் அன்று முதலான சகல பரீட்சைகளையும் பகிஷ்கரிக்கப் போவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் நிர்வாகக்குழு நேற்று விடுத்த அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது போராட்டம் தொடர்பாகவும் 29-ம் திகதி நடைபெறவிருக்கும் அடையாள உண்ணாவிரதம் தொடர்பாகவும் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலைய அங்கத்தவர்களை எமது பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்கள்.

முன்னர் குறிப்பிட்டபடி இன்று 24-ம்திகதி மாலை 4-00 மணிக்கு பல்கலைக்கழக மாணவர் பொதுஅறையில் தொழிற் சங்க, வெகுஜன ஸ்தாபன பிரதிநிதிகளை சந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

போராட்டத்திற்கு தேவையான நிதி சேகரிக்கவரும் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களை வேண்டுகிறோம். [ஒ]

## இருவர் காயம்

வல்வெட்டித்துறை, செவ்

இன்று காலை 8 மணியளவில் இப்பகுதியைச் சுற்றிப் பறந்த ஹெலிகொப்டரிலிருந்து எதுவித தாக்குதலுமின்றி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் பொது மக்களில் ஒரு பெண்ணும் இளைஞர் ஒருவரும் காயத்துக்குள்ளானார்கள்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பில் நின்ற புலிகள் 'ஹெலிமீது தாக்குதலை மேற்கொண்டதில் 'ஹெலி' பின்வாங்கி உயர்வாகப் பறந்து சென்றது.

## மரண அறிவித்தல்

### இலகுப்பிள்ளை பவளம்மா

இலகுப்பிள்ளை பவளம்மா காலமானார். இவர், தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், தியாகர சா (ஜேர்மனி), ஏகாம்பரம் (வர்த்தகர், உரும்பராய் சந்தி) பவளராணி, பவளமலர், புஷ்பமலர், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும் குலசிங்கம், குணராசா, நாகேஸ்வரன், செல்வரத்தினம் ஆகியோரின் மாமியாரும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று 24-9-86 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

[C4809] அறிவிப்பாளர்: ஏகாம்பரம்.

### இராசையா காண்டீபன் (ஞானம்)

இராசையா காண்டீபன் அகால மரணமானார். இவர் இராசையா தம்பதிகளின் மகனும், குணசிங்கம், குகதாசன், கருணாநிதி, அர்ச்சுதன், விசாகன், குணாளன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரியின் மைத்துனரும், சஜரூபன், காயத்ரி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று புதன்கிழமை (24-9-86) காலை 9 மணிக்கு நாயன்மார்கட்டிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C-4812)

### முத்து கனகரெட்னம்

யாழ்ப்பாணம் கலட்டியைச் சேர்ந்த திரு. முத்து கனகரெட்னம் (ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர் காணி அபிவிருத்தி திணைக்களம், தலைவர் யாழ். பிரம்ம ஞானச் சங்கம்) காலமானார். இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும், ஞானக்குமார் (சவுதி), செல்வி ஞானகௌரியின் தகப்பனாரும், ஜெயமனோவின் மாமனாரும் அபிராமியின் பேரனும், கந்தசாமியின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இல:56 கலட்டி அம்மன்வீதி வண்ணார்பண்ணையிலுள்ள அவரது இல்லத்தில் 24-9-86 புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை.

தகவல்: சி. கந்தசாமி (மைத்துனர்)

(C-4796)

### மீனாட்சி பொன்னையா

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் ஆகிய திருமதி மீனாட்சி பொன்னையா 22-9-86ல் காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற திரு. மேவின் முருகேசபிள்ளை சீனித்தம்பி பொன்னையாவின் அன்பு மனைவியும், திருமதி தயாரதி (யாழ். பல்கலைக்கழகம்), காலம்சென்ற திரு. தயாபரன் (பொறியியலாளர், பிரதான கட்டிடத் திணைக்களம், கொழும்பு வடக்கு), திரு. தயாநேசன் (சீபோண்ஸ் எக்ஸ்போட் லிமிற்றெட், யாழ்ப்பாணம்) திருமதி தயாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற திரு செல்வநாயகம் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), திருமதி ஜெயவதி, திருமதி நவமணி (அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி), திரு. வீ. பி. சீவரெத்தினம் (நிர்வாக இயக்குநர், சீவம்ஸ், சீபோண்ஸ் எக்ஸ்போட் லிமிற்றெட், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை 25-9-86 காலை 10 மணியளவில் இல: 15, பாம்குரோவ் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கொழும்பு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும். [C 4811]

## இனப்பிரச்னை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் விசாரணை செய்யும் என்றும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் மாகாணசபைகளை நிறுவும் யோசனைகளை தாம் ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதுபற்றிதமிழ் போராளிகள் குழுக்கள் இதுவரை எதனையும் தெரிவிக்கவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். [ஒ]

## இன்றைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழப்போராட்டம் முனைப்படைந்த இவ்வேளை ஈழமாணவர்களின் கல்வியினைக் கருவறுக்கும் செயல்களை அரசுமேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்திலே பாடசாலைகள் அகதிகள் முகாகளாகவும், சில பாடசாலைகள் இராணுவ முகாம்களாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

மன்னார், வவனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல பாடசாலைகள் அகதிகள் முகாம்களாகவுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் நாயாறு போன்ற இடங்களில் பாதுகாப்பு வலயம் காரணமாக பல பாடசாலைகள் இயங்கமுடிவதில்லை.

யாழ். மாவட்டத்தில் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படும் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரிகள் என்பன தொடர்ச்சியான ஷெல்தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டு கட்டிடங்களும் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ராணுவ முகாமாக்கப்பட்டுள்ளது. பலாலி சித்தி விநாயகர் பாடசாலை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. தீவுப் பகுதிப் பாடசாலைகள் போக்குவரத்து வசதியீனங்களால் கிரமமாக நடைபெறமுடிவதில்லை. வடமராட்சிப் பகுதியில் மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி என்பன இடமாற்றப்பட்டு கொட்டில்களிலே மாணவர்கள் படிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. நாள்தோறும் நடக்கும் ஷெல் தாக்குதல்களினால் அரைகுறையாகப் பாடங்கள் நிறுத்தப்படவேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. [ஒ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

### பருத்தித்துறையில்

## ஹெலி தாக்குதல் மூவர் காயம்

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று ஹெலிகாப்டர் ஒன்று பலதடவை வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனால் பீதியேற்பட்டது.

ஹெலியிலிருந்துமேற்கொள்கொள்ளப்பட்ட மோட்டார் ஷெல், பீரங்கி தாக்குதல்களினால் மூவர் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தும்பளை பருத்தித்துறையை சேர்ந்த இளையவன் சேகரன் (வயது80) வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெகநாதன் (வயது20) வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுவாமிநாதன் சிவக்கொழுந்து (வயது 40) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

### கல்கமுவ மக்கள் வங்கியில்:

## 20 லட்ச ரூபா பெறுமதியான நகை, பணம் கொள்ளை!

கொழும்பு

கல்கமுவ மக்கள்வங்கிக் கிளை நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:-

இனந்தெரியாத ஆயுதம் ஏந்திய ஐந்து நபர்கள் பாதுகாப்புபடையினர் போல் உடையணிந்து வங்கிக்குள் சென்று அங்கு கடமையிலிருந்த ஊழியர்களைப் பயமுறுத்தி பன்னிரண்டு லட்சம் ரூபா பணத்தினையும் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இக்கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்டதெனக் கருதப்படும் வாகனத்தை கொள்ளையர்கள் எரித்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். [ஒ]

## கன்னியாவில். . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீரர்களின் கடுமையான தாக்குதலின் பின் ராணுவ தரப்பில் 2 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர் எமது தரப்பில் சேதமெதுவும் இல்லை.

## லொறியில் . . .

ட்டத்தையும், லொறிகள் போக்குவரத்தில் ஈடுபடாதிருக்கும் போராட்டத்தையும் நடத்தவுள்ளனர்.

எரிபொருளுடன் வந்த லொறியொன்று அண்மையில் கடத்திச் செல்லப்பட்டதையும் மேற்படி அமைப்புக்கள் கண்டித்துள்ளன. [ச]

## பாரிஸ்.........

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆகிய அரசியல் பாணியில் இது ஒரு நட்புச் சூழ்நிலை எனக் கருதப்படுகிறது; இஸ்ரேல் இலகுவில் அசையாது. ஜப்பானும் சீனவும் இதனை புறக்கணிக்காது. பெரும் மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும் மேற்கு நாடுகளுக்கு பெரும் தலைவலிகொடுக்கும் திருப்பம்.

## இன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை சென்றடையும்.

அண்மையில் மட்டுநகர் படுவான்கரையில் இடம் பெற்ற இராணுவத்தினரின் வன்முறைகள் திருமலை. மூதூர் ஆகிய இடங்களில் கைதுசெய்யப்பட்டு காணமல் போகும் தமிழ்இளைஞர்களின் நிலைமை விமானத்தாக்குதல்கள் மற்றும் மலையகபகுதி சம்பவங்களை ஆட்சேபித்தே இந்த கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்படுகிறது. [வா]

### கல்வி இலாகா:

## உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 13 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளிடையே கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி இன்று முதல் ஆரம்பமாகின்றன.

## ஆஸ்பத்திரியில் இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம், புதன்.

யாழ். மாநகர சபைக் கட்டடத்துக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரை வீதியில் காணப்பட்ட இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் எடுத்து வரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். கோட்டை ராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் இவர் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் காணப்படும் இவ்விளைஞர் சுமார் 18 வயதுக்கும் 20 வயதுக்குமிடைப்பட்டவராவர். இவர் காற்சட்டை, சேர்ட் அணிந்து காணப்படுகிறார். நேற்றுப் பகல் சடலத்தை எடுத்து வருவதற்கு முயற்சிசெய்தபோது கோட்டை இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. எனினும் பின்பு சடலம் எடுத்துவரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [ச]